மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில்

தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை - அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை -

தமிழ்நாட்டை தொடந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் கூட்டணியையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்!

மதுரை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

நாள் : 15.03.2026 – நேரம் – காலை: 10.30 மணி

வ. எண்	கழக அமைப்பு – ஒன்றியம்/நகரம்/பகுதி/பேரூர்	கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம்
1.	மதுரை கிழக்கு, மதுரை கிழக்கு வடக்கு, மதுரை கிழக்கு தெற்கு, வண்டியூர்	கடச்சனேந்தல்
2.	மதுரை மேற்கு வடக்கு, கண்ணனேந்தல், திருப்பாலை, ஆனையூர்.	ஆட்டோ நிறுத்தம் அருகில், ஊமச்சிகுளம்.
3.	கொட்டாம்பட்டி கிழக்கு, மேற்கு, கொட்டாம்பட்டி வடக்கு, தெற்கு	கொட்டாம்பட்டி பேருந்து நிலையம்
4.	மேலூர் மேற்கு, மேலூர் வடக்கு, அ.வள்ளாலபட்டி.	அ.வள்ளாலபட்டி மந்தை
5.	மேலூர் கிழக்கு, மேலூர் தெற்கு, மேலூர் நகர்.	தபால் நிலையம் எதிரில் பேங்க் ரோடு, மேலூர்.
6.	அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் வடக்கு, பாலமேடு	ஸ்டேட் பேங்க் எதிரில், பாலமேடு.
7.	அலங்காநல்லூர் மேற்கு, தெற்கு, அலங்காநல்லூர் பேரூர், மதுரை மேற்கு	ஸ்டேட் பேங்க் எதிரில், அலங்காநல்லூர்.
8.	வாடிப்பட்டி வடக்கு, வாடிப்பட்டி பேரூர்	ஸ்டேட் பேங்க் எதிரில், வாடிப்பட்டி
9.	வாடிப்பட்டி தெற்கு, சோழவந்தான் பேரூர்	ஸ்டேட் பேங்க் எதிரில், சோழவந்தான்.
10.	பரவை, மதுரை வடமேற்கு கோவில்பாப்பாகுடி, கூடல்நகர், விளாங்குடி, திருப்பரங்குன்றம் வடக்கு	தபால் நிலையம் எதிரில், பாரதி மைதானம், பரவை.
11.	காளவாசல், பழங்காநத்தம், ஜெய்ஹிந்த்புரம், ஜீவாநகர், சோழையழகுபுரம், பைக்காரா, துரைச்சாமிநகர், பெத்தானியாபுரம், சம்பட்டிபுரம்,	குரு தியேட்டர் எதிரில், அண்ணா மெயின் வீதி, பெத்தானியாபுரம்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த அனைத்து அமைப்புகளின் நிர்வாகிகள் அனைவரும் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

அமைச்சர் பி.மூர்த்தி

செயலாளர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.

சமையல் எரிவாயு (LPG) தட்டுப்பாட்டைக் கண்டித்தும் - தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் - NDA அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஒன்றிய - நகர - பகுதி- பேரூர்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

ஒன்றிய பா.ஜக. - NDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு (LPG) தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் நாளை (15.3.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கீழ்கண்ட பட்டியல் விவரப்படி கீழ்காணும் ஒன்றிய - நகர- பகுதி - பேரூர்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

வ எண்	ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கும் ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்	ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம்	கண்டன உரையாற்றுவோர்
1.	பல்லாவரம் வடக்கு – தெற்கு, செம்பாக்கம் வடக்கு பகுதி, புனிததோமையார் மலை ஒன்றியம்	பல்லாவரம் பேருந்து நிலையம்	டி.ஆர். பாலு எம்.பி., கழக பொருளாளர்
2.	ஆலந்தூர் வடக்கு, தெற்குப் பகுதி, கண்டோன்மெண்ட் நகரம்	பழவந்தாங்கல் சுரங்கரப் பாதை	ஆர்.எஸ்.பாரதி கழக அமைப்புச் செயலாளர்
3.	குன்றத்தூர் – தெற்கு, மத்திய ஒன்றியம்	நந்தம்பாக்கம்	கு. செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்
4.	பெருங்களத்தூர் வடக்கு, தெற்கு, தாம்பரம் மேற்கு பகுதி	சண்முகம் சாலை, தாம்பரம்	எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர்
5.	செம்பாக்கம் தெற்கு – தாம்பரம் கிழக்குப் பகுதி	செம்பாக்கம்	ஆர்.எஸ்.செந்தில் குமார், மாவட்ட காங்கிரஸ் தலைவர்
6.	பம்மல் வடக்கு – தெற்குப் பகுதி	பம்மல்	மா.வை.மகேந்திரன் மாவட்ட ம.தி.மு.க. செயலாளர்
7.	திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் – பேருர் மாமல்லபுரம் நகரம்,	திருக்கழுக்குன்றம்	எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., வி.சி.க. து.பொ.ச.
8.	செங்கல்பட்டு நகரம்	செங்கல்பட்டு	வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., மாவட்ட கழக துணைச் செயலாளர்
9.	குன்றத்தூர் நகரம்	குன்றத்தூர்	அனகை முருகேசன் மாவட்ட தே.மு.க. செயலாளர்
10.	திருப்போரூர் வடக்கு – தெற்கு ஒன்றியம் – பேரூர்	திருப்போரூர்	பாரதி அண்ணா மாவட்ட சி.பி.ஐ.எம். செயலாளர்
11.	மறைமலைநகர் வடக்கு – தெற்கு நகரம்	மறைமலை நகர்	ராஜ்குமார் மாவட்ட சி.பி.ஐ. செயலாளர்
12.	மாங்காடு நகரம்	மாங்காடு	எம்.யாக்கூப் மனித நேய மக்கள் கட்சி து.பொ.செ.
13.	குன்றத்தூர் வடக்கு ஒன்றியம்	அய்யப்பந்தாங்கல்	வி.சி. கிருபாநிதி மாவட்ட வி.சி.க. செயலாளர்
14.	காட்டாங்குளத்தூர் வடக்கு – தெற்கு – மத்திய ஒன்றியம்	ஊரப்பாக்கம்	பிரபு மாவட்ட காங்கிரஸ் தலைவர்
15.	நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகரம்	கூடுவாஞ்சேரி	ஏ.சேக்தாவூர் மாவட்ட முஸ்லீம் லீக் தலைவர்
16.	திருப்பெரும்புதூர் வடக்கு – தெற்கு ஒன்றியம்	திருப்பெரும்புதூர்	எஸ்.ஏ. அருள் ராஜ், மாவட்ட காங்கிரஸ் தலைவர்

எனவே, கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ள மேற்கண்ட ஒன்றிய - நகர- பகுதி - பேரூர்களில் அந்தந்த ஒன்றிய, நகர, பகுதி, பேருர் தி.மு.க. செயலாளர் அனைவரும் ஒன்றிணைந்து இக்கண்டன ஆர்ப்பாட்டத்திற்கான துண்டறிக்கையை முறையாக அச்சிட்டு, அந்தந்த ஒன்றிய, நகர, பகுதி, பேருர்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி இடம் பெற்றுள்ள கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கு முறையாக அழைப்பிதழை தந்து கூட்டணிக் கட்சியாளர்கள் அனைவரும் ஆங்காங்கு நடைபெறும், இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாக பங்கேற்று இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் வெற்றிகரமாக நடத்தி தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன்

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

இந்திய நாட்டில்

எஃகு உற்பத்தியை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 14 -

நாட்டில் எஃகு தேவையை பூர்த்தி செய்ய அதிக அளவில் இறக்குமதி செய்வதை தவிர்க்கவும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும் ஒன்றிய அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார். அவரது கேள்விகள் வருமாறு:

நமது நாட்டில் 2025-26 ஆம் ஆண்டு 5 மில்லியன் டன்கள் எஃகு இறக்குமதி செய்து, எஃகு இறக்குமதிக்காக ஏறக்குறைய ரூ.1 லட்சம் கோடி செலவழிக்கிறது என்பது உண்மையா? அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

பிற நாடுகளில் இருந்து மிக அதிகளவிலான எஃகு இறக்குமதி குவிப்பது தொடர்பான பிரச்சினைகளுக்கு நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசாங்கம் எதிர்ப்புத் தீர்வை (ADD) நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

உள்நாட்டில் எஃகு உற்பத்தியை அதிகரிக்கவும், இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும் அரசு எடுத்த சீரான நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் எஃகு அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் பூபதிராஜு ஸ்ரீனிவாச வர்மா எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் வருமாறு :

நம் நாட்டில் நடப்பு நிதியாண்டில் அதாவது ஏப்ரல் - பிப்ரவரி 2025-26 ஆண்டு ரூ. 52,627 கோடி மதிப்பிலான 5.62 மில்லியன் டன்கள் எஃகு இறக்குமதி செய்யப்பட்டது.

இந்தியாவில் பிற நாடுகளில் இருந்து அதிகளவில் எஃகு குவிக்கப்படுவது தொடர்பான கவலைகளை நிவர்த்தி செய்ய, ஒரு சில எஃகு இறக்குமதிக்கு ஒன்றிய அரசாங்கம் எதிர்ப்புத் தீர்வை (ADD) நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன் படி சீனா, ஜப்பான், வியட்நாம், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து வரும் எஃகு குழாய்கள், மற்றும் இரும்பு குழாய்கள், அலாய், அல்லது அலாய் அல்லாத எஃகு (வார்ப்பிரும்பு மற்றும் துருப்பிடிக்காத எஃகு தவிர) எலக்ட்ரோ கால்வனேற்றப்பட்ட எஃகு குழாய்கள் மற்றும் குழாய்கள், பற்றவைக்கப்பட்ட துருப்பிடிக்காத எஃகு குழாய்கள் மற்றும் குழாய்கள், சூடான உருட்டப்பட்ட தட்டையான அலாய் அல்லது அல்லாய் எஃகு, குளிர் உருட்டப்பட்ட நோன்ஓரியன்டட் எலக்ட்ரிக்கல் ஸ்டீல் போன்றவைக்கு எதிர்ப்புத் தீர்வை (ADD) நடவடிக்கை தற்போது நடைமுறையில் உள்ளன.

இந்தியாவில் எஃகு ஒரு கட்டுப்பாடு நீக்கப்பட்ட துறையாகும், மேலும் நாட்டில் எஃகுத் துறையின் வளர்ச்சிக்கு உகந்த கொள்கை சூழலை உருவாக்குவதன் மூலம் ஒன்றிய அரசு ஒரு ஊக்கமளிக்கும் வசதியாளராக செயல் படுகிறது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான முடிவுகள் எஃகு நிறுவனங்களால் தொழில் நுட்ப வணிகக் கருத்தாய்வு மற்றும் சந்தை இயக்கவியல் ஆகியவற்றின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன.

இந்திய உள்நாட்டு எஃகு உற்பத்தியை அதிகரிக்கவும், பிற நாடுகளில் இருந்து இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும் ஒன்றிய அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

i. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இரும்பு மற்றும் எஃகு தயாரிப்புகள் (DMI&SP) கொள்கையை அரசு கொள்முதலுக்காக 'இந்தியாவில் தயாரிக்கப்பட்ட' எஃகு ஊக்குவிப்பதற்காக செயல்படுத்துதல்.

ii நாட்டிற்குள் 'ஸ்பெஷாலிட்டி ஸ்டீல்' உற்பத்தியை ஊக்குவிக்கவும், மூலதன முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் இறக்குமதியைக் குறைக்கவும் சிறப்பு ஸ்டீலுக்கான உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (பிஎல்ஐ) திட்டத்தைத் தொடங்குதல்.

iv. 2026-27 யூனியன் பட்ஜெட்டில், உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஆதரிப்பதற்கும் உள்நாட்டு எஃகு உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

1. ஜீரோ அடிப்படை சுங்க வரி (BCD) ஃபெரோநிக்கல் மீது தொடரப்பட்டது.

2. Cold Rolled Grain Oriented Steel (CRGO) தயாரிப்பில் பயன்படுத்த ஃபெரஸ் ஸ்க்ராப், மெக்னீசியம் ஆக்சைடு (MgO) பூசப்பட்ட குளிர் உருட்டப்பட்ட எஃகு சுருள்கள் மற்றும் குளிர் உருட்டப்பட்ட தானிய ஓரி உற்பத்திக்கான குறிப்பிட்ட பொருட்களுக்கு 31.03.2028 வரை தனிப்பயன் வரி விலக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

3. சீனா மற்றும் வியட்நாமில் இருந்து வெல்டட் ஸ்டெயின்லெஸ்ஸ்டீல் குழாய்கள் மற்றும் குழாய்களுக்கு மானியங்களை சமனாக்கும் ஈடுசெய் வரி விதிக்கப்பட்டுள்ளது.

4. உள்நாட்டு எஃகு தொழில் நலன்களைப் பாதுகாப்பதற்காக 7208, 7209, 7210, 7211, 7212, 7225 மற்றும் 7226 ஆகிய கட்டணத் தலைப்புகளின் கீழ் வரும் பொருள்களின் மீது, மூன்று ஆண்டுகளுக்கு இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்படும் "அலாய் மற்றும் அலாய் ஸ்டீல் பிளாட் தயாரிப்புகளின்" மீது அரசாங்கம் பாதுகாப்பு வரிகளை விதித்துள்ளது. இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

5G மொபைல் சேவையை,

கிராமப்புறங்களில் விரிவுபடுத்தும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றிய அரசின் கவனத்தில் உள்ளதா?

மாநிலங்களவையில் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி?

புதுடெல்லி, மார்ச். 14-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், திரு. எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் 12 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில், 5G மொபைல் சேவையை, கிராமப்புற மக்களும் பயன்படுத்தும் வகையில், அகன்ற அலை வரிசை சேவை விரிவுபடுத்தும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றிய அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? என்றும், அதனை விரைவாக நிறைற்றேவும், இந்தியாவின் அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவடையச் செய்யவும் ஏதேனும் கொள்கை முடிவுகள்

எடுக்கப்பட்டுள்ளனவா? என்றும் அதன் விவரங்களை மேலவை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்று ஒன்றிய அரசின் மாண்புமிகு தொலைத் தொடர்பு துறை இணையமைச்சர் டாக்டர் பெம்மாசனி சந்திரசேகர் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் தொலைத் தொடர்பு துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

இந்தியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 86 சதவீதம் அளவிற்கு 5G மொபைல் சேவை கிடைத்துள்ளது என்றும், அகன்ற அலை வரிசை சேவைகள் அனைத்து கிராமப்புறங்களுக்கும கிடைக்கவும், அனைவரும் இதன்மூலம் பயன்களைப் பெறவும் டிஜிட்டல் பாரத் நிதி என்ற திட்டத்தின் மூலம் உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும், பாரத் நெட் என்ற திட்டத்தின் மூலம் கடந்த சனவரி 2026 வரையில் 2,14,921 கிராமங்களுக்கு 5G அலைவரிசை சேவை கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது என்று இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார். மேலும், 4G மொபைல் சேவை 23,994 மொபைல் கோபுரங்களின் வழியாக நாடு முழுவதும் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது என்றும், சென்னைக்கும் அந்தமான் தீவுகளுக்கும் இடையில் 2312 கி.மீ. தூரத்திற்கும், கொச்சிக்கும் இலட்ச்த்தீவிற்கும் இடையில் 1869 கி.மீ. தூரத்திற்கும் கண்ணாடி இழை கேபிள்கள் நிறுவப்பட்டு ள்ளதாகவும் ஒன்றிய அரசின் மாண்புமிகு தொலைத் தொடர்பு துறை இணையமைச்சர் டாக்டர் பெம்மாசனி சந்திரசேகர் அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் திரு. எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

திரு.வி.க.நகர் – இராயபுரம் மண்டலங்களில்

ரூ.11.55 கோடியில் வளர்ச்சித் திட்டப் பணிகள்! ரூ.3.71 கோடியில் புதிய பணிகள்!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு அடிக்கல் நாட்டினார்!

சென்னை,மார்ச்.14-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (13.03.2026) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, திரு.வி.க.நகர் மற்றும் துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க.நகர் மற்றும் இராயபுரம் மண்டலங்களில் ரூ.11.55 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடம், தானியங்கி கழிவுநீர் நிலையம், புனரமைக்கப்பட்ட கழிவுநீர் உந்து நிலையங்கள் ஆகிய முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, ரூ.3.71 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் வடிகால் வசதி, சுகாதார மையக் கட்டடம், பெண்கள் நவீன உடற்பயிற்சிக் கூடம், குழந்தைகள் மையக் கட்டடம், வேம்புலியம்மன் திருக்கோயில் திருப்பணி ஆகிய பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74, பாஷ்யம் 2ஆவது தெருவில் மாநகராட்சியின் மூலதன நிதியில் ரூ.67 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பல்நோக்கு மையக் கட்டடத்தில் 2 நியாய விலைக் கடைகளைத் திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

பின்னர், மாநகராட்சி மூலதன நிதியில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதார மையக் கட்டடம், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் பெண்கள் நவீன உடற்பயிற்சிக் கூடம், ரூ.38.50 இலட்சம் மதிப்பீட்டில் குழந்தைகள் மையக் கட்டடம் என மொத்தம் ரூ.1.69 கோடி மதிப்பீட்டில் 3 புதிய திட்டப்பணிகளையும், இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் ஓட்டேரி, வாழைமா நகரில் உள்ள வேம்புலியம்மன் திருக்கோயில் திருப்பணியினையும் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

மேலும், வார்டு-71, மேட்டுப்பாளையம், கோவிந்தன் தெருவில் வசிக்கும் 90 குடும்பங்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் புதிய கழிவுநீர் வடிகால் வசதி மற்றும் சீரான புதிய குடிநீர் கட்டமைப்புகள் அமைப்பதற்கான பணிகளைத் தொடங்கி வைத்தார். இதற்காக இப்பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து நன்றிகளைத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம்மண்டலம், முத்தியால்பேட்டை, பி.ஆர்.என். கார்டன் பகுதியில் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் ரூ.4.48 கோடி மதிப்பிட்டில் கட்டப்பட்ட தானியங்கி கழிவுநீர் நிலையத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இதன் மூலமாக கழிவுநீர் அடைப்பு மற்றும் வழிந்தோடல்கள் முழுவதுமாக நீக்கப்பட்டு இப்பகுதியில் உள்ள சுமார் 52,480 நபர்கள் பயன்பெறுவார்கள்.

தொடர்ச்சியாக, வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.5.75 கோடி மதிப்பீட்டில் வடக்குச் சுவர் சாலை, அரசு சட்டக் கல்லூரி அருகில், சத்தியவாணி முத்துநகர் ஆகியவற்றில் புனரமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் உந்து நிலையங்கள் ஆகியவற்றைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இதன் மூலமாக 40 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் கழிவுநீர் உந்து நிலையங்களில் உள்ள பழைய பம்புகள் மாற்றப்பட்டு அதிக அளவு உறிஞ்சுத் திறன் கொண்ட புதிய பம்புகள் மாற்றப்பட்டுள்ளது. கழிவுநீர் உந்து நிலையத்தில் வெளியேறும் துர்நாற்றத்தை கட்டுப்படுத்த துர்நாற்ற கட்டுப்பாட்டு அமைப்பு பொருத்தப்பட்டும் மின் தடங்கல் ஏற்படும் நேரத்தில் தானியங்கியாக டீசல் ஜெனரேட்டர் இயங்குவதற்கான கட்டமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதிகளில் வசிக்கும் 1,81,175 நபர்கள் பயன்பெறுவார்கள். இக்கழிவுநீர் உந்து நிலையம் நாளொன்றுக்கு 11 மில்லியன் லிட்டர் கழிவுநீர் திறன் வெளியேற்றும் திறன் கொண்டதாகும்.

பின்னர், வார்டு-54, வ.உ.சி. சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தில் உள்ள நியாயவிலைக் கடையினைத் திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திரு மதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செயல் இயக்குநர் திரு.கௌரவ் குமார், வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு. கட்டா ரவி தேஜா, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையாளர் திருமதி ஜெ. முல்லை, உதவி ஆணையாளர் திருமதி புவனேஷ்வரி, மண்டலக்குழுத் தலைவர்கள் திருமதி சரிதா மகேஷ்குமார், திரு.பி.ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி புனிதவதி எத்திராஜன், திருமதி வெ.பரிமளம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

169வது வட்டம் ஆர்.சேகர் தாயார் ஆர்.ஆலையம்மாள் படத் திறப்பு !

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து அஞ்சலி!

சென்னை.மார்ச்.14-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கீழக்கு பகுதி 169 வது வட்டக் கழக முன்னாள் செயலாளர் ஆர்.சேகர் தாயாரும் சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சே.அருண் அவர்களின் பாட்டியுமான ஆர். ஆலையம்மாள் அண்மையில் இயற்கை எய்தினார்

அம்மையாரின் திருவுருவப் படத் திறப்பு நிகழ்ச்சி இன்று 1432026 சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு சின்னமலை வேளச்சேரி சாலையில் உள்ள ஆர்.சேகர் இல்லத்தில் வைத்து வட்டக் கழக செயலாளர் எல். ஆரோக்கியராஜ் தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அவர்கள் அம்மையாரின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்துகிறார்.

நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் பகுதி கழக செயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.சி. எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கினற்னர்.